

சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில், வருகின்ற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை நடைபெறவுள்ள ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் 2023 போட்டியினை சிறப்பாக நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் (06.07.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஷிப் - 2023 போட்டி!

# ரூ.12 கோடி தமிழ்நாடு அரசு நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - 'ஹாக்கி இந்தியா' நிர்வாகிகளிடம் வழங்கினார்!

சென்னை,ஜூலை 8 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023 2024 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற மானியக் கோரிக்கையின் போது 15 ஆண்டுகளுக்குப் பிறகு 2023ம் வருடம் ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் மீண்டும் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் சர்வதேச அளவிலான ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி 2023 நடத்திட தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 17.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் 2023 போட்டிகள் சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூபாய் 16 கோடி மதிப்பீட்டில் முதன்மை ஹாக்கி செயற்கை இழை ஆடுகளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை இழை ஆடுகளம் மற்றும் இணைப்புபணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர்மாடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிறசீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்த போட்டிகளை சிறப்பாக நடத்துவது தொடர்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு உயர் அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் இந்த போட்டிகளில் பங்கேற்க வருகின்ற சர்வதேச ஹாக்கி வீரர்கள் தங்கும் நட்சத்திர விடுதிகள், உணவு, போக்குவரத்து வசதிகள், மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, அரசு கூடுதல் தலைமைச் செயலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறையின் அரசு முதன்மை செயலாளர் க. மணிவாசன், வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அரசு செயலாளர் ஜெ. குமரகுருபரன், பொதுத் துறையின் அரசு செயலாளர் கே. நந்தகுமார், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இயக்குநர் சந்தீப் நந்தூரி. பெருநகர சென்னை மாநகராட்சியின் கூடுதல் ஆணையர் சங்கர்லால் குமாவத் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் த. மோகன், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. எம். அருணா, பெருநகர சென்னை காவல் துறை ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை இயக்குநர் டாக்டர். டி. எஸ். செல்வ விநாயகம், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ஜி. அறிவொளி, கல்லூரி கல்வி இயக்குநர் திருமதி கோ. கீதா, ஹாக்கி இந்தியா தலைமை நிர்வாக அதிகாரி திருமதி எலினா நார்மன், ஹாக்கி இந்தியா, பொது செயலாளர் போலா நாத் சிங், ஹாக்கி இந்தியா நிர்வாக இயக்குநர், ஸ்ரீவஸ்தவா, ஹாக்கி இந்தியா பொருளாளர் சேகர் மனோகரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் - 2023 போட்டியினை நடத்துவதற்காக அரசின் நிதியுதவியாக 12 கோடி ரூபாய்க்கான காசோலையினை ஹாக்கி இந்தியா, பொதுச் செயலாளர் போலாநாத் சிங் அவர்களிடம் வழங்கினார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/3421/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**
**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| பல்வேறு மண்டலங்களில் உள்ள 1123 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023 - 24) | 1 முதல் 9 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.1020.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.1080.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி
செ.ம.தொ.இ / 3503 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்
மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/3420/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**
**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**TURIF (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 3, 4, 5, 8, 9, 10, 11, 13 & 14ல் உள்ள 335 உட்புற தார், சாலைகள் மேம்படுத்தும் பணி (சிப்பம் 1 முதல் 15) TURIF (2023 - 24) | 1 முதல் 15 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.46.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.108.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி
செ.ம.தொ.இ / 3501 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்
மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/3423/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**
**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| பல்வேறு மண்டலங்களில் உள்ள 164 எண்ணிக்கையிலான உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023 - 24) | 1 முதல் 24 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.76.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.98.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி
செ.ம.தொ.இ / 3505 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்
மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)


## 'வாட்ஸ்அப்'பில் வந்த செய்தி!




### வேப்பேரி பெண்டிங்க் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தூய்மை இந்தியா திட்டம்!

சென்னை, ஜூலை 8 -

சென்னை மாநகராட்சி சார்பாக இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வேப்பேரி பென்டிங்க் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் நோய்த் தடுப்பு குறித்து நேற்று முன்தினம் (06.07.2023) விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இதில் மாநகராட்சி சார்பாக மாணவிகளுக்கு தங்கள் வீடுகளில் சேரும் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகள் மற்றும் அபாயகரமான வீட்டுக் குப்பைகள் என்று பிரித்து அளிக்க வேண்டிய அவசியத்தை குறித்து காட்சி வழி விளக்கம் (PPT) மற்றும் காணொலி காட்சிகள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் கண்காட்சியின் மூலமும் விளக்கப்பட்டது.

பின்னர் மாணவிகள் அனைவரும் தூய்மைத் தூதுவர்களாக அறிவிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. தூய்மைத் தூதுவர்களாக அறிவிக்கப்பட்ட மாணவிகள் தங்கள் வீடு, தெரு மற்றும் பிற பகுதிகளில் குப்பைகளை வகைப் பிரித்து அளிக்க வேண்டியதன் அவசியத்தை குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக உறுதி அளித்தனர்.

### ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக ஓயாமல் குரல் கொடுத்த

# 'திராவிட மணி' இரட்டைமலை சீனிவாசனாரின் பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூர்வோம்!

## பிறந்த நாளையொட்டி வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!


**சென்னை, ஜூலை 8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'திராவிட மணி' இரட்டைமலை சீனிவாசனாரின் பிறந்த நாளையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் "ஒடுக்கப்பட்ட சமூகங்களின் விடியலுக்காக" ஓயாமல் குரல் கொடுத்த 'திராவிட மணி' இரட்டை மலை சீனிவாசனாரின் பங்களிப்புகளை நன்றியுடன் 'நினைவு கூர்வோம்!' என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் வலைதளப் பதிவு வருமாறு:-

தான் பெற்ற கல்வியறிவைக் கொண்டு, ஆதிதிராவிடர்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போராடிய தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாள்!

இலண்டன் சென்று ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைச் சந்தித்தபோதும், அச்சம் என்பதே இன்றி, அவருடன் கை குலுக்க மறுத்து, இந்தியாவில் நிகழ்ந்து வரும் தீண்டாமைக் கொடுமைகளை எடுத்துக் கூறியதுதான் அவரது நெஞ்சுரம்.



வட்டமேசை மாநாட்டில் அண்ணல் அம்பேத்கருடன் நகமும் சதையும் போல இணைந்து தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் பேசினார்.

ஒடுக்கப்பட்ட சமூகங்களின் விடிவுக்காக ஓயாமல் குரல் கொடுத்த 'திராவிடமணி' இரட்டைமலை சீனிவாசனாரின் பங்களிப்புகளை நன்றியுடன் நினைவுகூர்வோம்!

சமத்துவத்துக்கான பயணத்தில் சமரசம் தவிர்த்து வெல்வோம்!

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### இந்து ராஷ்டிராவை முன்னெடுப்பதில் -

# பொது சிவில் சட்டத்திற்கு நிச்சயம் பங்குள்ளது!

## பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் விமர்சனம்!

புதுடெல்லி, ஜூலை 8 -

பொது சிவில் சட்டம் குறித்தான விவாதம் சமீபத்தில் அதிகளவில் நடந்து வருகிறது. இந்து ராஷ்டிராவின் ஒரு பகுதியே பொது சிவில் சட்டம் என பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் விமர்சித்துள்ளார். 'பொது சிவில் சட்டத்தை அமல் படுத்துவதில் இனியும் தாமதம் கூடாது என்ற செய்தியைப் படித்தேன். இத்தகைய முட்டாள்தனமான யோசனை எங்கிருந்து' வந்தது என அமர்த்தியா சென் கேள்வி எழுப்பியுள்ளார்.

2024 மக்களவைத் தேர்தலுக்கு குறுகிய காலமே இருக்கும் நிலையில், பொது சிவில் சட்டத்தை விரைந்து அமல்படுத்தி தேர்தல் ஆதாயம் பெறும் உள்நோக்கத்துடன், அதன் மீதான கருத்துக் கேட்புக் கூட்டங்களை அவசர அவசரமாக நடத்தி வருகிறது ஒன்றிய பாஜக அரசு. இந்நிலையில், பொருளாதார அறிஞரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா சென் கூறுகையில், "வெவ்வேறு மதங்கள், அவற்றுக்கென தனித்தனி பழக்க வழக்கங்கள் சடங்கள் என நமக்குள் வேறு பாடுகள் உள்ளன. அந்த வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றால் பொது சிவில் சட்டம் தேவை என்று செய்தித்தாள்களில் படித்தேன். இத்தகைய முட்டாள்தனமான யோசனை எங்கிருந்து வந்தது" என அவர் கேள்வி எழுப்பினார்.

இந்து ராஷ்டிராவுடன் பொது சிவில் சட்டத்திற்கு தொடர்பு உள்ளதா? என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு, "நிச்சயமாக தொடர்பு இருக்கிறது, இந்து ராஷ்டிராவை முன்னெடுப்பதில் பொது சிவில் சட்டத்திற்கு நிச்சயம் பங்குள்ளது" என்று கூறினார்.

இந்து ராஷ்டிரமே நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரே வழி என்று கூறுவதன் மூலம் இந்து மதம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்றார். மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இத்தகைய சட்டம் இல்லாமல் இருந்த நம்மால் எதிர்காலத்திலும் இருக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பிரதமர் மோடி அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்ற போது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தான் மோடியுடன் உரையாடினால், அதன் ஒரு பகுதி, 'இந்தியாவில் உள்ள சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் குறித்ததாக இருக்கும் என்று கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு, இந்தியா வர்க்கங்களாலும், மதங்களாலும், பாலினங்களாலும் வேறுபாடுகளை கொண்டுள்ளது இது மிகப் பெரிய சவால்' என்றார் அவர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/3422/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**
**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோராயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| பல்வேறு மண்டலங்களில் உள்ள 581 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023 - 24) | 1 முதல் 17 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.250.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.280.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பு 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.07.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி
செ.ம.தொ.இ / 3504 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்
மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்.வி. சக்கரை மைதீன்

### ஜூலை 8 (1987)



**தனது இளமை காலந்தொட்டே தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு கொள்கையை பரப்பி வந்த இவர், கழகம் துவங்கியபோதே அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**பட்டிதொட்டியெங்கும் கழகக் கொள்கைகளை பிரச்சாரம் செய்த இவர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தின் வட்டச் செயலாளராக பணியாற்றினார்.**

**இவரது கழகப் பணியினை போற்றும் வண்ணம் கோவையில் நடைபெற்ற மாநாட்டு அரங்கிற்கு இவரது பெயர் வைக்கப்பட்டது.**

**இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**